
# நவராத்திரி

## வரலாறும் - வழிபாடும்



திரு மந்திர விளக்கம்

வெள்ளவத்தை இந்துசமய கலை கலாசார வளர்ச்சிப் பணிமன்றம்
இல, 57, 63ம் ஒழுங்கை, வெள்ளவத்தை
தொ.பே.இல: 2502334, 2360301.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி நாயகியின் ஒன்பது வடிவங்கள்

| நாட்கள் | அன்னையின் அம்சம் | சக்தி | நோக்கம் | அன்னையின் வடிவம் | அலங்காரத் தோற்றம் | அம்பிகையை இந் நாளில் நினைப்பதால் ஏற்படும் பலன்கள் |
|---|---|---|---|---|---|---|
| முதல் நாள் | துர்க்கை | இச்சாசக்தி | மதுகைடபர் வதம் | மகேஸ்வரி | அபயம், வரதம், புத்தகம், அட்ச மாலை தாங்கிய குமாரி துர்க்கை | வறுமை நீங்கும், வாழ்நாள் பெருகும் |
| இரண்டாம் நாள் | ,, | ,, | மகிஷாசுரனை வதம் செய்யப் புறப்படுதல் | கௌமாரி | கரும்பு, வில், மலரம்பு, பாசாங்குசம் ஏந்திய ராஜேஸ்வரி | நோய்கள் நீங்கி உடல் நலம் பெருகும் |
| மூன்றாம் நாள் | ,, | ,, | மகிஷாசுர வதம் | வராகி | கையில் சூலம் மற்றும் மகிஷன் தலைமீது அமர்ந்த கல்யாணி துர்க்கை | தனதான்யம் பெருகும், வாழ்வு செழிக்கும் |
| நான்காம் நாள் | லட்சுமி | கிரியாசக்தி | தேவர்துதி ஏற்றல் | மகாலட்சுமி | சிங்காதனத்தில் வெற்றித் திருக்கோலத்தில் ஜய துர்க்கை. | பகை விலகும் |
| ஐந்தாம் நாள் | ,, | ,, | அம்மனின் தூதன் சுக்ரீவன் தூது சொல்வதைக் கேட்டல் | வைஷ்ணவி | சுகாசனத்தில் காளி துர்க்கை | விரும்பிய செல்வங்கள் கிடைக்கும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆறாம் நாள் | ,, | ,, | தூம்ர லோசன வதம் | இந்திராணி | சாப்பாசனம், கையில் அட்சமாலை, கபாலம், தாமரை மற்றும் தலையில் பிறைசூடிய சண்டிகாதேவி. | வழக்குகளில் வெற்றி உண்டாகும். கவலை நீங்கும். பொருள் சேரும். |
| ஏழாம் நாள் | சரஸ்வதி | ஞானசக்தி | சண்டமுண்ட வதம் | ப்ராஹ்மி | பொற்பீடம், ஒருபாதம் கீழே தாமரை மலரில் வீணை வாசிக்கும் சாம்பவி துர்க்கை | முக்தி சித்திக்கும். |
| எட்டாம் நாள் | ,, | ,, | இரத்தபீஜன் வதம் | நாரசிம்ஹி | கரும்புவில் - சுற்றிலும் அனிமா முதலிய அஷ்ட சக்திகள் கருணை துர்க்கா | வேண்டிய வரங்கள் கிடைக்கும். |
| ஒன்பதாம் நாள் | ,, | ,, | சும்ப நிசும்ப வதம் | சாமுண்டி | கையில்வில் பாணம் அங்குசம் சூலத்துடன் சுபத்ரா தேவி | இஷ்டசித்தி உண்டாகும். |
| பத்தாம் நாள் | மகாசக்தி | மகா சக்தி | வெற்றி பெற்றநாள் | சிவசக்தி | ஸ்தூல ரூபம் | பதினாறு பேறும் பெற்று இன்புறலாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்கார மூர்த்தி





க. சிவசுப்பிரமணியம்
திருமுறை வித்தகர்
பிரமஞானி
உதவிச் செயலாளர்
வெள்ளவத்தை இந்து சமய
கலை கலாசார பணியகம்.

0774609477

மும்மண்டல நாயகி

## 5. சத்தி பேதம் - திரிபுரை சக்கரம்

*(சத்தி பேதமாவது, சத்தியே கலைமகள், அலைமகள், மலை மகளாகவுள்ள பேதம். திரிபுரை - மும்மண்டல நாயகி இவளே பரமேஸ்வரனோடு அபின்னமாகப் பிரிப்பின்றி யிருந்து பஞ்ச கிருத்தியம் செய்ய வல்லவள். இதனைப் பற்றி விரிவாகப் பேசுவது இப்பகுதி என்க.)*

**1045.** மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமையை உள்ளொளி ஓராறு கோடியில்
தாமான மந்திரம் சத்திதன் மூர்த்திகள்
ஆமாய் அலவாந் திரிபுரை யாங்கே. (1)

காரிய உலகு உடல் பொருள்களுக்குக் காரணமாகிய மாமாயையும், அக்காரிய மாயையும் ஒளியாகிய வைந்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் செவி ஓசையும், ஓமொழியும் அதன் உள் ஒளியாகிய எழுத்துக்களும் அறுபகைக்கு உடனாகும் அறுகோடி மாயையின் ஆற்றல்களும் தாமே இயங்கும் தன்மையவல்ல. மந்திர உருவமாகிய திருவருள் ஆற்றல் இவற்றை இயைந்து இயக்குகின்றது. அதனால் அவை இயக்க இயங்கும் பொருளாகும். அவ் ஆற்றலே திரிபுரை என்று வழங்கப் படும். அவ்வாறு இயைந்து இயக்கினும் அவ் ஆற்றல் பொருள் தன்மையால் வேறாகும். அறுகோடி வகையாயுள்ள மந்திரங்கள் என்றலும் ஒன்று. சத்தி தன் மூர்த்திகளாம் என்பதற்குச் சத்தியின் எழுத்துருவங்கள் என்றலும் ஒன்று. (வயிந்தவம் - விந்து. ஓ மாயை - பிரணவம்.)

1046. திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மனி என்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே. (2)

திரிபுரை யானவள் அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று கண்டங்களாக விளங்குபவள். பேரழகு வாய்ந்தவள், ஆகாய வடிவானவள். உலகைப் பரிந்து காக்கும் செவ்வொளியுள் உள்ளவள். நாரணனுக்குத் திதித் தொழிலை நடத்த மாயா உருவை வழங்கியவள். பலவாகிய நிறத்தையுடையவள். மகேசன் சத்தியாகிக் கருநிறத்தில் விளங்குபவள். சதாசிவ சத்தியாகி நினைப்பவர் மனத்தில் விளங்குபவள். இவ் வாறாகத் திரிபுர தேவி ஒருத்தியே பல சத்திகளாக விளங்கு கிறாள். ஒன்பது திருப் பெயர்களும் ஒன்பது ஆற்றல்களைக் குறிப்பினவாகும். (ஸ்திதி - திதி - காத்தல்.)

1047. தானா அமைந்தஅம் முப்புரம் தன்னிடைத்
தானான மூவுரு ஒருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமும் முத்தியும் நல்குமே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே அமைந்த முப்புரங்களில் தானே மூவுருவம் ஓர் உருவாம் தன்மையுடையவள். தானே பொன் செம்மை வெண்ணிறத்தை உடையவள். போகத்தையும் மோட்சத்தையும் கல்வியையும் அளிப்பவளாக விளங்கும். வெண்ணிறத் தலைவு கலைமகள் கல்வியையும், பொன்னிறத் தலைவி திருமகள் போகத்தையும், செந் நிறத்தலைவி உமாதேவி முத்தியையும் அளிப்பாள் என்க.

1048. நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரைஅபி ராமி அகோசரி
புல்கும் அருளும்அப் போதந்தந் தாளுமே. (4)

திரிபுரை நாதத்தையும் நாதம் கடந்து நாதாந்த நிலையையும் தந்தருளுவாள். பரவிந்துவாக இருந்து பெருகுகின்ற உலகம் முதலான அண்டங்களை நல்குவாள். பரையும் அபிராமியும் அகோரியும் ஆகிய அன்னை அன்போடு தழுவி அருளுவாள். பின் அறிவினை வழங்கி ஆட் கொள்வாள். (அபிராமி - பேரழகி; அகோரி - வாக்குக்கும் மனத்துக்கும் அப்பாற் பட்டவள்.)

1049. தாளணி நூபுரம் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே. (5)

அழகிய காலணி சிலம்பு; செம்பட்டு உடை; கச்சு கொங்கையில் அணி செய்வது; மலர் அம்பு; கரும்பு வில்; எழுச்சியைத் தரும் அங்குச பாசமும், அழகிய கிரீடத்தையும் கருமையான நீலநிறக் குண்டலத்தையும் உடைய தேவிக்கு ஆம். இராஜேஸ்வரியின் உருவம் கூறியவாறு.

1050. குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட அரத்த நிறமன்னு கோலத்தள்
கண்டிகை ஆரம் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலங்களைக் காதில் அணிந்தவள்; கொல்லும் தன்மையுள்ள வில் போன்ற வளைந்த புருவத்தை உடையவள்; செந் நிறத் திருமேனி கொண்டு விளங்குபவள். தோளணியையும் கழுத்தணியையும் ஒளி விடுகின்ற முடியினையும் சந்திரனையும் உடைய சண்டிகா தேவி நான்கு திசைகளையுடைய உலகங்களைக் காப்பவளானாள்.

1051. நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றலில் மோகினி மாதிருக் கும்சிகை
நன்றறி கண்டிகை நாற்கால் கரீடணி
துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே. (7)

உயிர் உய்யக் கலந்து நிற்கும் அம்மை திரிபுரை யாவாள். நிலைபெற்ற தொன்மையள். குறையாத அழகுடையவள். இவள் சீர்களின் சிரசுக்கு மேலுள்ள சிகையில் விளங்குபவள். நன்றாக அறியும் கண்களையுடையவள். நான்கு திசை இடங்களில் உள்ளவற்றைத் தன்பால் இழுக்கும் செயல் புரிபவள். சுத்த தாமரையாகிய சகஸ்ரதளத்தில் விளங்கும் சுத்த வித்தியா தேவியாகும். (நாற்காற் கரீடணி என்பதற்கு யானைவாகனம் உடையவள் எனினுமாம்.)

1052. சுத்தவம்பு ஆரத் தனத்தி சுகோதயள்
வத்துவம் ஆய்ஆ ளும்மாசத்தி மாபரை
அத்தகை யான மனஆரணி தானுமாய்
வைத்தஅக் கோல மதியவள் ஆகுமே. (8)

தூய்மையான கச்சினையும் மாலையையும் அணிந்தவள்; இன்ப ஊற்றாகும் இயல்பினள்; பொருளாகக் கொண்டு சீவர்களை ஆட்கொள்கின்ற பெரிய சத்தி; பராபரை; அவ்வாறான மனமாகிய காட்டில் வசிப்பவள்; தானேயாகப் படைத்துக் கொண்ட வடிவத்தையுடைய ஞான சொரூபியாக ஆவாள் அல்லது தானேயாக விளங்கும் சந்திர மண்டலம் ஆவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1053\. அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்று இல்லை
அவளன்றி ஊர்புகும் ஆறறி யேனே. (9)

திருவருள் ஆற்றலை உணராத தேவர்களும் இலர். திருவருள் துணையின்றிச் செய்யும் சீரிய தவமும் இல்லை. அவள் துணையின்றி அருந்தவப் பேற்றால் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் ஐங்கடவுளராலும் ஆவதொன்று இல்லை. அவள் தன் அருள் துணையில்லாமல் திருவடிப் பேறு கைகூடச் செய்யும் செந் நெறியும் இல்லை. (ஊர் - முத்தியுலகம்.)

1054\. அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அறிவுரு வாம்அவள் என்பர்
அறிவார் கருமம் அவள்இச்சை என்பர்
அறிவார் பரனும் அவளிடத் தானே. (10)

திருவடி உணர்வு கைவந்த மெய்கண்டார் அருள் அம்மையின் திருவுருப் பேரின்பம் என்பர். அறிவுரு எனவும் கூறுவர். ஐந் தொழிலும் அவளது விழைவாகிய திருவுள்ளம் என்பர். விழுமிய முழுமுதற் சிவனும் அவளிடமாகக் கொண்டு திகழ்பவன் என்பர். சத்தி, சிவம் வேறின்றி உள்ள நிலையைக் கூறிற்று இம்மந்திரம்.

1055\. தான்எங்கு உளன்அங்கு உளதுதையல் மாதேவி
ஊன்எங் குளஅங்கு உள்ளுயிர்க் காவலன்
வான் எங் குளஅங் குளேவந்தும் அப்பாலாம்
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே. (11)

சிவமாகிய தான் எங்கு உள்ளதோ அங்கு உள்ளது. தையலாகிய பராசக்தி. ஊனலாகிய உடல் எங்கோ அங்கு உயிர்க் குயிராகிப் காவலானாக இருப்பவள். ஆகாயம் எங்கெங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதோ அங்கு அங்கு எல்லாமும் அதற்கு அப்பாலாம் பரவெளியிலும் விளங்கும். அவ்வாறு தலைவனாகத் தேவியே நின்ற குறிப்புக்களை ஆராய்ந்து அறிக. 'வந்தும் அப்பாலாம்' என்பதற்கு 'மந்த மாருதம்' என்றும் பாடபேதம் உள்ளது. (மந்தமாருதம் - தென்றற் காற்று.)

1056. பராசத்தி மாசத்தி பல்வகை யாலும்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
பராசத்தி புண்ணிய மாகிய போகமே. (12)

பராசத்தியே பலவகையாலும் மேன்மை வாய்ந்தவள். யாவற்றையும் தாங்கும் ஆதார சத்தியாய் நின்ற தன்மையை உணர்க. எங்கும் பரவுகின்ற சத்தியும் அவளே. எல்லா ஊழிகளிலும் ஆருயிர்களைக் காக்கும் ஆற்றல் உடைய வளும் அவளே. புண்ணிய பயனைத் தந்தருளும் வாழ்வும் அவளேயாம்.

1057. போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய்து ஆங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய்து ஆங்கே அடியவர் நாள்தொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே. (13)

சீவர்களுக்குப் போகத்தை ஊட்டுபவள். குண்டலினி சத்தியோடு பொருந்திச் சீவர்களுக்குப் பரிபாகத்தைச் செய்து பராசத்தியாய் நிற்கும். அடியார்களுக்கு நாள் தோறும் வளர்கின்ற ஒளியுடலை அளித்துப் பரிபாகம் உண்டாகும்படி செய்யும் கொழு கொம்பாகவும் விளங்கு வாள். பராசத்தியே போகத்தையும் ஞானத்தையும் கொடுப்பவள் ஆவாள்.

1058. கொம்புஅனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பு போன்று துவளும் இடையினை யுடையாளை, குவிந்த அழகிய மார்பினையுடைய மங்கையை, மணங் கமழ்கின்ற மலர் சூடிய கூந்தலை யுடையாளைச் சிவவுலகத் துள்ளார் இடையறாது சிந்தித்துத் தொழும் செல்வியைச் செம்மையான பவழம் போலும் திருமேனியை யுடைய இள நங்கையை மும்மைக்கும் பெருந்துணை யென்று உறுதியாக நம்பி மிக விரும்பி என் உள்ளத்துள் வைத்தேன். (சிறுமி - கௌரி.)

1059. வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சத்தியும் வித்தைத் தலையவ ளாமே. *(15)*

உலகில் உண்டு பண்ணி வைத்த பொருளும் அவற்றோடு பொருந்திய உயிர்க்கூட்டமும், பத்துத் திசையிலும் நிறைந்து காக்கும் பத்து முகங்களை உடையவளும் பரையும் பராபரை யும், அந்தக் கரணம் நான்கனையும் செயல்படுத்துபவளும் ஆகிய தேவி ஸ்ரீ வித்தைக்கும் தலைவியாம். ஸ்திரீ தேவதை யால் கிடைக்கும் ஞானத்துக்கு வித்தை என்றும் புருஷ தேவ தையால் கிடைக்கும் ஞானத்துக்கு கல்பம் என்றும் பெயர். (பரை - நடப்பாற்றல்; பராபரை - வனப்பாற்றல்.)

1060. தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவம்செய்யும் தூய்நெறித் தோகை
கலைபல வென்றிடும் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே. *(16)*

திருவருளம்மை அண்ணாந்து ஏந்திய வனமுலையினையு டைய தையலாகிய தலைவி. அவளே கெடாத நற்றவஞ் செய் யும் செந் நெறித் தோகை. மறைமுறை முதலாகிய உறுதி நூல் களும் இலக்கண இலக்கிய முதலிய எழில் நூல்களும் உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குய்ய உள்நின்ற உணர்த்தியருளிய என்றும் ஒரு படித்தாம் கன்னியாவளும் அவளே. என்னுள்ளம் அவள்பால் நிலை பெற்று நிற்பதன் பொருட்டு வெளிப்பட்டு நின்றனள். (மறை - வேதம். முறை - ஆகமம்.)

1061. நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந்து ஏழுல கும்தொழ
மன்றது ஒன்றி மனோன்மனி மங்கலி
ஒன்றெனோடு ஒன்றிநின் று ஒத்துஅடைந்
தாளே. (17)

நிறைந்து நின்ற அத் திருவருள் அம்மை சிறந்த அணிகலன் களை உடையவள். அழிவில்லாத நிறைந்த முழுக் கலைகளு டன் என் நெஞ்சத்து வீற்றிருந்தனள். அவளே எல்லா உலகி னரும் வந்து எளிதாகத் தொழும்படி பொன்னம்பலத்தின் கண் பொருந்தி நின்றனள். மனோன்மனி எனவும் மங்கலம் உடையவள் எனவும் அழைக்கப் படுபவளும் அவளே. அவள் சிவத்துடன் வேறு அற ஒன்றி நின்று யாண்டும் ஒத்து உறைந்தனள் என்க.

1062. ஒத்தடங் கும்கம லத்திடை ஆயிழை
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மனி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே. (18)

சிவத்துடன் யாண்டும் மரமும் காழ்ப்பும்போல உடன்ஒத்து அடங்கிநிற்கும். தாமரை யிருக்கையினையு டைய செல்வி, தகுதிவாய்ந்த அருட்செயல் புரிகின்ற பெரு முதல்வி. களிப்படையச் செய்யும் மனோன்மனி. மங்கல மாண்பினள் என்னும் திருவருள் தன்னை வழிபடுவார்க்குப் பல்வேறு சித்திகளையும் எளிதாக அடைவிக்கும் நன்னெறி யினைச் சிலர் உணராது இருக்கின்றனர். (மத்து - களிப்பு. சித்தடைக்கும் வழி - சித்துக்களை அடையும் மார்க்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1063. உணர்ந்துட னேறிங்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே. (19)

ஆருயிர்கட்கு விளக்கும் கருவியாக அமைந்து சிவத்துடன் கூடி உடனாய் நிற்பள். அக வொளியாய் விளங்குவாள். மலர் சூடிய கூந்தலையுடைய மங்கையும் அத்திருவுருவுள் விளங்கும் சிவமுடன் ஒன்றாய் வெளிப்பட்டு அருள்வள். அப்பொழுது அவ் அம்மையைத் தூய மனத்துள் நாடி முயல்வார்க்கு அவள் நன்னிலையை நல்கி யருள்வள். (கணிந்தெழுதல் - நாடி முயலுதல். கதி - நன்னிலை.)

1064. அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே. (20)

அனைத்து உயிர்களிடத்தும் சமமான தலையளி செய்யும் பெண் பிள்ளை. பேரின்பப் பேரழகி. மெய்யடியார் உள்ளம் புளியம் பழமும் தோடும் ஒன்றாயிருந்தும் ஒட்டுப் பற்றின்றி நிற்பது போல் உலகியலில் பற்றின்றி நிற்கும். அந்நிலையினை நோக்கி உண்மையினைத் தெளிவிப்பள். உயிரின் அழியாத் தன்மையினையும் சிவனுடன் கூடும் பேரின்ப நிலையினையும் காட்டுவள். அதன்பின் திருவடியுணர்வு வண்ணமாய் நம்மை ஆக்குவள். அம் முறையில் அடியேனையும் உய்யக் கொண்டாள் என்க.

1065. உண்டில்லை என்றது உருச்செய்து நின்றது
வண்தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டல முன்றுற மன்னிநின் றாளே. (21)

உலகோர் உண்டு என்றும் இல்லை என்றும் கூறிய சத்தியே, சூக்குமத்தைத் தூலமாகச் செய்து வளப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய தில்லை மன்று என்று கூறப்பெறும் சிற்றம் பலத்தில் நிலைபெற்று நின்றது. ஆன்மாவின் பந்த மோட் சங்களுக்குக் காரணம் அறிவுருவான சிவத்தினிடம் உள்ளது என்பதையும் உலகோர் அறிவதில்லை. ஆன்மாக்களது மூன்று மண்டலங்களிலும் நிலைபெற்று விளங்கினாள்.

1066. நின்றாள் அவன்தன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுள் புகுந்துணர் வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடுஅங்கை யாளே. (22)

சிவபெருமானின் உடலும் உயிருமாக என்றும் நிற்பவள் திருவருள் அம்மை. மெய்யடியார்களைச் சிவனிலையில் சேர்ப்பிக்கும் வனப்பாற்றலாகிய அருளம்மை என் நெஞ் சத்தால் கலப்பால் ஒன்றாய்ப் பொருள் தன்மையால் வேறாய் உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாய்ப் புகுந்து நின்றனள். பேருணர்வாகவே நின்றனள். பேரொளி யாகவும் நின்றனள். செந்தமிழ் மறையும் முறையும் வரைந்த திருஏடு அங்கையில் உள்ளவள். (அவன் சிவபெருமான். பராசத்தி - வனப்பாற்றல்.)

1067. ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.
(23)

வாக்கு ரூபத்தில் விளங்குபவள். எங்களது இறைவி மூன்று கண்களையுடையவள். படிகம் போன்ற தூய வெண்ணிறத்தாள். வெண் தாமரையில் விரும்பி இருப் பவள். நாத மயமாய் விளங்குபவள். இவளைச் சிரசில் அணியுங்கள். புகழ்ந்து இவளைத் துதியுங்கள்.

1068. தோத்திரம் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிடும்
பார்த்திடும் அங்குச பாசம் பசுங்கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை ஆருமாம் ஆதிக்கே. (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளை ஓதிப் புகழ்ந்து தொழுக. இரண்டு திருவடிகளையும் பேறு வாய்க்குமாறு ஏத்தி என்றும் வழி படு நெறியில் உரைத்து நிற்க. தோட்டியும் கயிறும், கரும்பு வில்லும், பூங்கணையும் உடையவள் அம்மை. சிவமெய்யி னின்றும் சிவை மெய் தோன்றினமையால் ஆதித் திருவரு ளுக்கு அவள் பிள்ளை முறையுமாம். (சிவை சத்தி; மெய் - தத்துவம். வழிபடும் ஆறு இரும் - வழிபாடு செய்யும் நெறியில் நில்லுங்கள்.)

1069. ஆதி விதமிகத் தண்தந்த மால்தங்கை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பல்காற் பயில்விரல்
சோதி மிகுந்துமுக் காலமும் தோன்றுமே. (25)

சிவபெருமானின் ஆதித் தொழிலாகிய படைப்புப் பெருகச் செய்தவள் குளிர்ச்சி பொருந்திய நீர்ப்பிரதேசத்தி லுள்ள திருமாலின் தங்கையாகிய நாராயணி. அந்நேரிழை யின் திருப் பெயராகிய நமசிவய என்னும் தமிழ் ஐந்தெழுத்து அருள் மந்திரத்தை முறையாக எட்டிதழ்த் தாமரை அதன் மத்தியில் அமைக்கப் பலமுறை உருவேற்றத் திருவருள் ஒளி பெருகும். அது பெருக, அகக்கண் திறந்து முக்கால வுணர்ச்சியும் கைகூடும். இதனை யோகக் காட்சி என்ப.

1070. மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆயந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே. (26)

அகரம் முதல் உன்மனை ஈறாகவுள்ள பதினாறு கலைகளையும் வடிவமாக உடையவள். வேதம் முதலாக வுள்ள நூல்களில் பரமாகவும் அபரமாகவும் புகழ்ந்து பேசப்பட்டவள். சீவர்களின் இருப்புக்கு ஆதாரமாய் விளங்குபவள். நாதம் நாதாந்தத்தில் விளங்கும் சிவத்துக்கு இவளே அருட் சத்தியும் ஆவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1071. அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் நானே. (27)

மெய்ப் பொருளைத் தனக்கே உரிமையாகப் பெற்ற அருள் வழங்கும் தன்மையுடைய சகல புவன நாயகியான திரிபுரை மயக்கத்தைத் தரும் பிரபஞ்சத்தைப் பற்றிய சீவர்களது சித்தத்தை மாற்றி, நிலையான பந்தமற்ற புவனங்களைப் பொருந்திய திருவடியை நான் வணங்கு வேன். மனிதர்காள்! இவ்வுண்மையை அனுபவத்தில் கண்ட நீங்கள் பிறருக்கு எடுத்துச் சொல்ல முன் வாருங்கள்.

1072. ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வர்ஆகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுபடை ஏந்திய வெண்ணகை
ஊன மறஉணர்ந் தார்உளத்து ஓங்குமே. (28)

தேவியைச் சூழவுள்ள சப்த மாதர்களில் ஒருத்தியானவ ராகி என்பவள் வராக முகத்தோடு கூடிய அடையாளத்தை உடையவள். இழிந்தோர் உடலை இடித்து வருத்துகின்ற உலக்கையோடு, மற்றை கலப்பை ஏந்திய கைகளும் வெண் மையான நகையினையும் உடையவள். அவள் குற்றமற்ற ஊனுடலைக் கடந்து தியானிப்பவர் உள்ளத்தில் சிறந்து விளங்குபவள். தேவியைத் தண்ட நாயகியாக வணங்கு வார்க்கு வெற்றியை அளிப்பாள் என்பதாம். (வராகம் - பன்றி.)

1073. ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே. (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ மொழிக்கு உரியவளாகிய பெண்பிள்ளை என்றும் நீங்காத மரகத மாகிய பச்சை நிறத்தை யுடையவள். எழுச்சி யுடையவளாய் அருளோன் ஆண்டான் அரன் அரி அயன் என்னும் ஐவர் நிலைகளையும் படைத்து ஐவரையும் தொழிற் படுத்தும் ஆற்றலள். ரீங்காரத்துள்ளே இனிதிருந்த னள் என்க. ரீங்காரம் மாயையின் வித்தெழுத் தென்ப. தேனுண்டு மயங்கி வீழும் வண்டொலியை ஒத்திருப்பதும் காண்க. (ஆங்காரி - எழுச்சி யுடையவள்.)

074. தானே தலைவி எனநின்ற தற்பரை
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமும் மனமும்நற் புத்தியும்
தானே சிவகதி தன்மையும் ஆமே. (30)

தானே எல்லாவற்றிற்கும் தலைவியென நின்ற பராசத்தி! இவளே வாக்கு ரூபமாக விளங்கும் பதினான்கு வித்தைகளும் தேவ லோகங்களையும் மன மண்டலத்தையும் நுண்ணறிவையும் கடந்த நாதாந்தமும் தானே சிவகதியை அளிப்பவளும் ஆவாள். பதினான்கு வித்தைகள்: வேதம் 4, அங்கம் 6, நியாயம் 1, மீமாம்சை 1, மிருதி 1, புராணம் 1 ஆக 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org